# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல் (IFB)

### இலங்கை புகையிரத சேவைக்காக CNC SURFACE WHEEL LATHE MACHINE ஒன்றினை வழங்கல், நிறுவல், இயங்கச்செய்தல் மற்றும் ஒப்படைப்பதற்கான கொள்முதல்

### SRS F.8030

1. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் (மேஜர்) தவைரினால் த.பெ.இல. 355, புகையிரத தலைமையகம், கொழும்பு திணைக்களத்திற்கு இலங்கை புகையிரத சேவைக்காக **CNC SURFACE WHEEL LATHE MACHINE** ஒன்றினை வழங்கல், நிறுவல், இயங்கச்செய்தல் மற்றும் ஒப்படைப்பதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. மனுதாரர்கள் பவர் ஆ.்ப் அற்றோனி அதிகாரம் பெற்ற முகவர் மூலம் தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. கேள்விகோரல் **சர்வதே போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (ICB)**

3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : +94 (11) 2438078, அல்லது +94 (11) 4600202**
   **தொலைநகல் இல : +94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com, tender1@railway.gov.lk**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்த மனுதாரர்கள் ஏலம் எடுக்க தகுதியுடையவர்களாவர்.

   - உற்பத்தியாளர்கள் தயாரிப்பில் 10 வருட அனுபவம் மற்றும் கடந்த 05 வருடங்களில் இதே போன்ற CNC Surface wheel lathe இயந்திரங்களை ஏற்றுமதி செய்வதில் மற்றும் CNC Surface wheel lathe இயந்திரங்களை தயாரிப்பதற்கு செல்லுபடியாகும் ISO அல்லது அதற்கு சமமான சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - மனுதாரர் மற்றும் உற்பத்தியாளர் ஒரே நபராக அல்லது ஒரே நிறுவனமாக இல்லையாயின், தனது சொந்த நாட்டிற்கு வெளியே இதே மாதிரியான தன்மையை ஒத்த ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடித்த அனுபவம் மற்றும் இலங்கைக்குள் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய திறனைக் கொண்டிருத்தல்.
   - ரோலிங் ஸ்டாக் அல்லது கனரக இயந்திரங்கள் போன்ற அதிக மதிப்புள்ள பொருட்களை கையாள்வதில் அனுபவம் பெற்றவர் மற்றும் கடந்த 5 ஆண்டுகளாக இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனராக இருத்தல் மற்றும் சொந்தப் வேளைத்தளத் வசதியைக் கொண்டிருத்தல்.

5. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.4,000,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.12.05** ஆம் திகதி முதல் **2025.01.16** ஆம் திகதி **பி.ப.3.00 மணி வரை (இலங்கை நேரம்)** திருப்பிச் செலுத்தப்படாத **ரூ.55,000.00** இனை இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்திற்கு சமமான கொள்முதல் கட்டணத்தினைச் செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்), ரயில்வே கொள்முதல் துணைத் திணைக்களம், ஓல்காட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை** என்ற முகவரிக்கு சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம்.

7. ஏலத்திற்கு முந்திய கூட்டம் **2024.12.20 ஆம் திகதி அன்று மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களத்தில்** நடைபெறும்.

8. மனுக்கள் **2025.01.17 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   **தலைவர்,**
   **திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
   **இலங்கை புகையிரத சேவைகள்,**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**

   **2025.01.17 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு **அறை இலக்கம் 01, மூன்றாம் மாடி, புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு, த.பெ.இல-1347, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.** எனும் முகவரியில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
குறிப்பு இலக்கம் : **SRS/F.8030**

SELACINE